**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 206/2024**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 11.11.2025.**

| | |
|---|---|
| **Name : மாதுராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 1 present. )** (A2, A3 absent. Petition filed and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையிலிருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2023 ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 01.08.2023–ம் தேதி ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சரவணன் நிலையத்தில் இருந்த போது ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த கலையரசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் நிலையம் வந்து மனு ரசீது எண்.209/2023 என்ற எண்ணில் பதிவு செய்து பின்னர் விசாரணை செய்து அதன் பேரில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.186/2023 u/Sec. 294(பி), 336 IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். மனு ரசீது **அ.சா.ஆ.4** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். இதன் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி வசம் ஒப்படைத்தார்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 08.08.2023ம் தேதி மாலை 6 மணிக்கு சம்பவ இடம் ஜலகண்டாபுரம் 6 வது வார்டு வாதியின் வீட்டிற்கு சென்று சாட்சிகள் சந்தோஷ்குமார் மற்றும் பிரபாகரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு

பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். வரைபடம் **அ.சா.ஆ 6** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் கலையரசன், லிங்கேஷ்வரன், வெங்கடாஜலம், சந்தோஷ்குமார், பிரபாகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் வாதி 01.08.2023 ம் தேதி வீட்டிலிருந்த போது அவர் வீட்டின் கதவை திறக்கும் போது வாதியின் மீது மின்சாரம் பாய்ந்து ஷாக் அடித்ததாகவும் 02.08.2023 ம்தேதி மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்ததாகவும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மருத்துவமனையில் வாக்குமூலம் பதிவு செய்தார். ராஜா என்பவர் வீட்டு வேலை செய்யும் போது மின்சாரம் செல்லும் ஒயரை எந்த தகவலும் சொல்லாமல் கலையரசன் வீட்டு பக்கமாக தள்ளி வைத்து கட்டியிருந்தார். இதனை அறியாத கலையரசன் என்பவர் ஷாக் அடித்து கீழே விழுந்து காலில் அடிப்பட்டு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மருத்துவர் ஜெகதீஸ்வரி சிகிச்சை அளித்தார். இது குறித்து மின்சார வாரியம் உதவி பொறியாளர் சிவக்குமார் வசம் விசாரணை செய்து வாக்குமூலம் பதியப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டது. மின்பாதையை மாற்றி அமைக்க மதிப்பீட்டு தொகை செலுத்த வேண்டி கொடுக்கப்பட்ட சான்றிதழ் தாக்கல் செய்யப்படுகிறது. அவ்வாறான சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆகும்.

4. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 16.09.2023 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்.

5. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 17.09.2023 ம் தேதி **நி.கு.எண்.186/2023 u/Sec. 294(பி), 336 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

6. இந்த வழக்கில் 05.08.2023 ம் தேதி புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். மனு ரசீது எண்.209/2023 என்று வழங்கப்பட்டது என்றால் 05.08.2023 ம் தேதி வழங்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் 01.08.2023 ம் தேதி

வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தட்டச்சு பிழையாகும். இந்த வழக்கின் புகார்தாருக்கு வெளிக்காயம் இல்லை என்றால் ஆமாம். புகார்தாரரின் வீடும், 1ம் எதிரியின் வீடும் வேறு வேறு வீதியில் உள்ளது என்றால் சரிதான்.

7) இரண்டு வீடுகளுக்கும் நடுவில் எத்தனை அடி வீதி என்றால் 6 அடி வீதி உள்ளது. இந்த சம்பவம் என்று நடந்ததாக தெரிந்து கொண்டேன் என்றால் 01.08.2023ம் தேதி இரவு நடந்ததாக தெரிந்து கொண்டேன். மறுநாள் காலை புகார்தாரர் எழுத்து பூர்வமான புகாரை அளித்தாரா என்றால் இல்லை. என் விசாரணையில் எழுத்து பூர்வமான புகாரை காவல் நிலையத்தில் அளித்து அதனை காவலர்கள் வாங்கவில்லை என்று கூறியுள்ளாரா என்றால் இல்லை.

8) இந்த வழக்கில் எதன் அடிப்படையில் எதிரிகள் மீது இதச பிரிவு 294(பி) பதிவு செய்தேன் என்றால் புகார்தாரர் அவரது வாக்குமூலத்தில் எதிரிகள் அவரை அசிங்கமாக திட்டியதாக கொடுத்ததால் அவர்கள் மீது மேற்கண்ட பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என் வாக்குமூலத்தில் அ.சா.1 எதிரி அவர் வீட்டு மாடியிலிருந்து திட்டியதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

9) நான் சரிவர விசாரிக்கவில்லை என்றும் அ.சா.1, 2 இருவரும் 1ம் எதிரி அவர் வீட்டு மாடியிலிருந்து அ.சா.1யை திட்டியதாக சொல்லியுள்ளார்கள் என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. அ.சா.6 சிவக்குமார் என் விசாரணையில் சம்பவயிடம் சென்று பார்த்ததாகவும் எதிரி வீட்டின் கரண்ட் ஒயர் அ.சா.1ன் வீட்டில் மோதவில்லை என்று சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். கண்ணுற்ற சாட்சிகள் இந்த வழக்கில் யார் யார் என்றால் அ.சா.1யை தவிர வேறு யாரும் இல்லை.

10) அ.சா.2 யை என்று எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 08.08.2023ம் தேதி சம்பவயிடத்தின் அருகில் வைத்து விசாரித்தேன். என் விசாரணையில் 08.08.2023ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. எதிரிகளின் வீட்டிற்கு அருகே குடியிருக்கும் அ.சா.1 எதிரியின் வீட்டை விலைக்கு கேட்ட போது 1ம் எதிரி கொடுக்காத காரணத்தால் எதிரிகள் மீது தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

11) 3ம் எதிரி மற்றும் 1ம் எதிரி வேறு வேறு வீட்டில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். வேறு வேறு வீதியில் உள்ளார்கள் என்றால் ஆமாம். நான் சம்பவயிடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைப்படம் தயாரித்தேன் என்றால்

சரியல்ல. சம்பவயிடம் சென்று மகஜர் சாட்சிகளை விசாரிக்காத காரணத்தால் தான் அ.சா.5 பிரபாகரன் நீதிமன்றத்தில் சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

12) ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து புகார்தாரரை மேல் சிகிச்சைக்காக எடப்பாடி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த தகவலை என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எடப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரா என்றால் இல்லை. புகார்தாரருக்கு எதிரிகள் மீதிருந்த தனிப்பட்ட விரோதம் காரணமாக எதிரிகள் மீது தவறான ஒரு புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 10:58:02 +0530

Judicial Magistrate No.II,
Mettur.